முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 243/2013

வாதி தரப்பு சாட்சி-2 பிச்சைமுத்து **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**7 முதல் 9, 10,11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். எந்த ஆண்டில் பணிபுரிந்தேன் என்றால் 2013 முதல் 2016 வரை பணியாற்றி 2016 ம் வருடம் மே மாதம் ஓய்வு பெற்றேன். எந்த ஊரில் என்றால் சின்னயம்பாளையம் கிராமத்தில் பணியாற்றினேன். நான் வசிப்பது கழுகூர் மகாளிப்பட்டி. சின்னயம்பாளையத்திற்கும் கழுகூர் மகாளிப்பட்டிக்கும் சுமார் ஒரு கி.மீ தொலைவு இருக்கும். எனக்கு சொந்தமாக தோட்டம் மற்றும் வீடு உள்ளது. எனக்கு எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றால் 3.50 ஏக்கர் உள்ளது. அதன் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.314/2J, 250/1A ஆகும். மேற்படி எனது சொத்துக்கள் பூர்வீக சொத்துகளாகும். பூர்வீக சொத்துக்கள் என்றால் என்ன என்றால் எனது பாட்டன் வழி சொத்தாகும். நீண்ட கால அனுபவத்தில் இருந்தால் அரசு பட்டா வழங்குமா என்றால் வழங்காது. உரிமை ஆவணங்கள் இருந்தால் பட்டா வழங்கப்படும்.

2. எனக்கு என்ன உரிமை ஆவணம் உள்ளது என்றால எனது பாட்டா காலத்தில் பாக பாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. யார் கிரையம் பெற்றது என்றால் எனது தாத்தா பெயரில் பட்டா இருந்தது. எனது தாத்தா பெயரில் பட்டா ஏற்பட்டதற்கு காரணம் அவர் நீண்ட காலம் அனுபவம் செய்து வந்தது தான் என்றால் சரிதான். நீண்ட காலமாக அனுபவம் செய்து வருபவர்களுக்கு அரசாங்கம் பட்டா வழங்கும்எ ன்றால் சரிதான். தாவா சொத்திலும் நீண்ட காலம் அனுபவத்து வந்ததால் தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பச்சையப்பன் பெயரில் உள்ளது. பச்சையப்பன் பிள்ளை பெயரில் உள்ள ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் பார்த்தேன் என்றால் பட்டா பார்த்தேன். சாட்சி தற்போது மீண்டும் பச்சையப்பன் பெயரில் பட்டா இல்லை என்றும், பொன்னுசாமி பெயரில் பட்டா இருப்பதாக கூறுகிறார்.

3. பொன்னுசாமி பெயருக்கு எப்படி பட்டா ஏற்பட்டது என்றால் பூர்வீக சொத்து,

அவரும் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினார். அவரும் சின்னையம்பாளையம் கிராமத்தில் வசிக்கிறார். சின்னையம்பாளையம் ஊரில் உள்ள நிலங்களை பொறுத்து கிராம கணக்குகளை பொன்னுசாமி பார்ப்பார் என்றால் சரிதான். பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பொன்னுசாமி பிள்ளைக்கு தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா இருந்தது என தெரியாது என்றால் தெரியாது. பொன்னுசாமி பிள்ளை பெயரில் தாவா சொத்திற்கான பட்டா எந்த வருடம் மாற்றப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது. யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் பாலசுப்பிரமணியனை மட்டும் தெரியும் மற்றவர்களை தெரியாது. இவ்வழக்கின் எதிர் தரப்பினர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் என்னென்ன சர்வே எண்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.386/1A, 386/3A ஆகும். சர்வே எண். 386/1A, 386/3A புல வரைபடத்தில் , பூமியின் அமைப்பிலும் எவ்வாறு உள்ளது என பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன்.

4. சர்வே எண்.386/1A மற்ற நிலமான 386/3A ன் தென்புறம் உள்ளதா வடபுறம் உள்ளதா என்றால் நியாபகம் இல்லை. பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்து தென்வடல் ரோட்டிற்கு மேற்குபுறம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஒரே சதுரமான நிலமாக உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை பொன்னுசாமி மகன் பாலசுப்பிரமணிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். எப்போது என நியாபகம் இல்லை. தாவா சொத்தின் அமைப்பு தெரியாது என்றும், பாலசுப்பிரமணியன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பால சுப்பிரமணியன் தாவா சொத்தில் எப்போதும் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. மருதபிள்ளை மகன் முத்துசாமியை தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-R.தமிழரசி**

**Principal District Munsif,**
**Kulithalai.**